Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |
|---|---|

வேணு : 17 ஏப்ரல் 2012 கானம் : 9



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 17 | ஏப்ரல் 2012 | கானம் : 9

Delivered by India Post www.indiapost.gov.in

மார்ச் 4 – 12, 2012 – பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில்
– ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம்





திருவள்ளுவர் பள்ளி –குடியாத்தம்
26.2.2012 –மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை

ஸ்டார் விஜய் டிவி. பக்தி திருவிழா துவக்கம் சென்னை நாரதகானசபா 2.3.2012
ஸ்ரீஸ்வாமிஜியுடன் ஸ்டார் விஜய் டிவி. 'Channel Head' ஸ்ரீ கேஸ்ரீராம்





பிப்ரவரி 19 – ‘தீ நியூ லைஃப் சாரிடபிள் டிரஸ்ட்’ – ஆதரவற்ற முதியோர் மற்றும் குழந்தைகள் சரணாலயம்” – சென்னை படப்பை அருகே இறையூர் கிராமம் – “மதுரவாணி கூடம்” – புதிய கட்டிட திறப்பு விழா






மார்ச் 12 – "தன்முனைப்பு தூண்டல் பயிலரங்கம்" – அம்பர் தெனாங்க் தமிழ்ப்பள்ளி – மலேசியா நாமத்வார் குழுவினர்





சிறந்த சமுதாயத்தை உருவாக்குவதே நாமதுவார் பொதுநல இயக்க நோக்கம்



மார்ச் 10– அமெரிக்கா ஹூஸ்டன் நாமத்வார் இரண்டாவது வருட பூர்த்தி விழா




March 15 - 18 - USA - Frisco Dallas Hanuman Temple - "Ancient Wisdom for Modern Times" - Lecture by Poornimaji



March 17 & 18 - Mumbai Andheri East I-Plex -Workshop on Personality Development - to C.A. Students - By Ramanujamji

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:17 ஏப்ரல் 2012 கானம்:9

## ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
## ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


- மதுரமான மஹனீயர்-193 03
- மதுர யாத்திரை 07
- பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் 10
- பாகவத பழம் -25 12
- வேலை தருவது அவன் வேலை 16
- பாலகர்களுக்கு ஒரு கதை 19
- நாமானுபவம் 25
- ப்ருந்தாவன கண்ணன் 38
- மாலே மணிவண்ணா 40
- அப்பாலுக்கு அப்பால் 42


ஸ்ம்ருத்வா வியோகஜம் துக்கம் த்யஜ ஸ்நேஹம் ப்ரியே ஜனே
அதிஸ்நேஹ பரிஷ்வங்காத் வர்திரார்த்ராபி தஹ்யதே

திரி ஈரமாயிருந்தாலும் கூட, விளக்கில் நன்றாக எண்ணெயில் நனைக்கப்பட்டு விட்டால், நெருப்பினால் எரிக்கப்பட்டு விடுகிறதல்லவா? திரிக்கு எண்ணெயிடம் ஏற்பட்ட விசேஷ நட்புதான் இத்துன்பத்திற்கு காரணம். அதை மனதில் வைத்துக்கொண்டு, புருஷர்களில் உத்தமனான ராமா! நீ, பிரியமானவர்களிடம் வைத்திருக்கும் பற்றை விடு!

– லக்ஷ்மணர் ராமருக்கு சொல்வது கிஷ்கிந்தா காண்டம் – 1.116

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: கேதாரகௌளை    தாளம்: ஆதி

**பல்லவி**

கழுகுக்கும் கடன் செய்த கருணாமூர்த்தி
நீயன்றோ காகுத்ஸ்தா
(கழுகுக்கும் ..)

**அனுபல்லவி**

பழகும் விதத்திலும் ஒழுகும் தர்மத்திலும்
உமக்கு நிகர் வேர் யாருண்டு?
(கழுகுக்கும் ..)

**சரணங்கள்**

குணமென்றும் குற்றமென்றும் பார்க்கவே பார்க்காமல்
தக்க தருணத்தில் அபயம் தந்து
பவபயம் போக்கி முக்தி நல்கிடும்
ஸுலப நாமம் உமக்கே உரியதன்றோ
(கழுகுக்கும் ..)

முன் அட்டை: ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் – பிரேமிக வித்யா கேந்திராவில் – குர்கான் ஹரியானா – பிப்ரவரி 24 – 26, 2012

பின் அட்டை : ஸ்ரீஸ்வாமிஜி பெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் மார்ச் 4 – 12, 2012



# மதுரமான மஹநீயர் - 193

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

நமது சத்சங்கத்தை சேர்ந்த திரு.ஆனந்த் தயாநிதி சென்னை மேற்கு மாம்பலத்தில் இருந்து வரும் பல அன்பர்களில் ஒருவர். சத்சங்கங்களில் தவறாது இவரை பார்க்கலாம். குரு கைங்கர்ய பிரியர். நாமகீர்த்தனத்திலும் மிக்க ருசி உண்டு இவருக்கு. தனியார் துறையிலுள்ள ஒரு கம்பெனியில், ஒரு முக்கிய பொறுப்பில் பணியாற்றி வருகிறார். தனது வேலைகளுக்கு மத்தியில், தன் வீட்டின் அருகே வசிக்கும் பல குழந்தைகளுடன் தன் குழந்தைகளுக்கும், பகவானின் கதைகளையும், பாகவத கதைகளையும், பஜனை பாடல்களையும், சொல்லி கொடுப்பார். மிகவும் ஆசையுடனும், சிரத்தையுடனும் சொல்லி கொடுப்பார் இவர் என்பதற்கு சான்றாக ஒரு சம்பவம் நடந்தது.



மார்ச் 18 ஏகாதசி. அன்று ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய ஏராளமானோர் ஆஸ்ரமம் வந்திருந்தனர். ஆனந்தும் வந்திருந்தார்.

ஸ்ரீஸ்வாமிஜி திடீரென ஆனந்தின் குழந்தைகளை கதை சொல்ல சொன்னார்கள். அந்த குழந்தைகள் கதை சொன்ன விதம் அங்கிருந்த பலரையும் ஆச்சரியப்பட வைத்தது. பாட்டுக்கள் பாடி, கதைகளை ஆர்வமாக, அழகாக சொன்னதை கேட்டு ஸ்ரீஸ்வாமிஜி சந்தோஷப்பட்டார் என்பது கண்கூடாக தெரிந்தது. மேலும் ஸ்ரீஸ்வாமிஜி " ஆனந்த் எப்படி சொல்லி கொடுத்திருக்கிறார் பார். அழகாய் குழந்தைகள் சொல்கின்றனவே. எனக்கு மிகவும் பிடித்திருந்தது" என்றார். இந்த மகிழ்ச்சியான விஷயத்தை ஆனந்திடம் நான் சொல்லாது இருப்பேனா? ஒரு சந்தர்ப்பத்தில்

சொன்னேன்.

அவர் அதை கேட்டவுடன் "ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சந்தோஷத்திற்குத்தானே இதை எல்லாம் செய்வது? அவர் சந்தோஷமடைந்தார் என்றால் அதற்கு மேல் என்ன தேவை" என்றார். இதை சொல்கையில் அவர் கண்கள் பனித்திருந்தது. மேலும் அவர் "இதில் என்ன இருக்கிறது? எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வழிநடத்துவதுதான். நான் வெறும் கருவிதானே" என்று சொன்னார். அப்படியே, தான் சொல்வது தனது அனுபவம் என்பது போல், இரு சம்பவங்களை சொன்னார். கேட்ட எனக்கு அவை மிகவும் பிடித்து போனது. அதைத்தான் இங்கு பார்க்க போகிறோம்.

ஆஸ்ரமம் வந்தவர்களுக்கு தெரியும். அங்கு ஒரு புத்தக ஸ்டால் உண்டு. இங்கு ஸ்ரீஸ்வாமிஜி மற்றும் ஸ்ரீப்ரேமிக வரதனின் திருவுருவப்படங்கள் கிடைக்கும். திரு.ஆனந்த் அவர்கள் ஒருமுறை ஆஸ்ரமத்திற்கு வந்தபொழுது, புத்தக ஸ்டாலிற்குள் நுழைந்து பார்த்திருக்கிறார். அங்கு பல படங்களுக்கு மத்தியில், ஸ்ரீஸ்வாமிஜி பண்டரிபுர சந்திரபாகா நதியில் ஒரு படகில் அமர்ந்திருக்கும் திருவுருவப்படம் ஒன்றை கண்டார். அது அவருக்கு மிகவும் பிடித்து போனது. உடனே வாங்கியும் விட்டார். வீட்டிற்கு கொண்டு சென்ற பின்னர், அவர் அதை மாட்டவில்லை. மேஜை மீது வைத்து விட்டார். இன்று மாட்டுவோம், நாளை மாட்டுவோம் என்று இருந்து விட்டார்.

இது இப்படி இருக்க, அவர் வீட்டருகில் இருந்த ஒரு குழந்தைக்கு பிறந்தநாள் வந்தது. அதை கொண்டாட அவ்வீட்டார் நாமகீர்த்தனத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். ஆனந்தையும் சத்சங்கமாக பேச அழைத்தனர். இப்பொழுதுதான் நமது சத்சங்கத்தை சேர்ந்த அன்பர்களின் வீட்டில் ஏதாவது விசேஷம் என்றால் நாமகீர்த்தனம், சத்சங்கம், உபன்யாசம் என்று வைத்து கொள்வது வழக்கமாகி விட்டதே! அப்படி ஆனந்தும் நாமகீர்த்தனத்தில் கலந்து கொள்ள வீட்டை விட்டு கிளம்பினார்.

அப்பொழுது தாம் சில தினங்கள் முன் வாங்கிய ஸ்ரீஸ்வாமிஜி

அவர்களின் திருவுருவப்படம் அவர் கண்ணில் பட்டது. அந்த திருவுருவம் அவரிடம் “என்னையும் கூட்டிக் கொண்டு செல்” என்று சொல்வது போல் அவருக்கு தோன்றி இருக்கிறது. சில சமயங்களில் ஏன் செய்கிறோம் என்று நமக்கே தெரியாது. அப்படியே ஏதோ உத்தரவிற்கு கட்டுப்பட்டது போல் செய்வோம் அல்லவா! அப்படித்தான் ஆனந்தும் அந்த படத்தை எடுத்து கொண்டு சென்றார். அங்கு நாமகீர்த்தன முடிவில், தாம் கொண்டு வந்திருந்த ஸ்ரீஸ்வாமிஜியின் படத்தை அந்த பையனுக்கு பரிசாக கொடுக்கலாமே என ஆனந்திற்கு தோன்றி இருக்கிறது. அப்படியே செய்தும் விட்டார்.

அதை அந்த பையனின் கைகளில் கொடுக்கும்பொழுது, அந்த பையனின் தாய் அழுதுவிட்டார். ஆனந்த் அவரை பார்த்து, “எதற்காக அழுகிறீர்கள்” என்று வினவ, அந்த பையனின் தாயோ “நான் பலமுறை தொலைக்காட்சியில் ஸ்ரீஸ்வாமிஜி பேசுவதை கேட்டு ஆனந்தப்பட்டு இருக்கிறேன். மனதில் அவரை தரிசிக்க வேண்டும் என்று ஏக்கம் எனக்கு பலகாலமாய் உண்டு. சமயம் வாய்க்கவில்லை என்பதால், இதுவரை அவரை நான் நேரில் தரிசனம் செய்ததில்லை. என் பையனின் பிறந்த நாள் இன்றுதானே? நேற்று எனக்கு ஒரு கனவு வந்தது. அதில் ஸ்ரீஸ்வாமிஜி நேரில், என் பையனின் பிறந்த நாள் விழாவிற்கு வந்து, அவன் தலை மேல் கை வைத்து ஆசிர்வதிப்பதாக கண்டேன். அது பொய்யல்ல, நிஜம்தான் என்பதற்கு சான்றாக, இன்றோ நீங்கள் ஸ்ரீஸ்வாமிஜியின் புகைப்படத்தை என் பையனுக்கு பரிசாக தருகிறீர்கள். இதை என்னவென்பது!” என்று உருக்கமாக சொன்னார். ஆனந்தும் அதை கேட்டு ஆச்சரியப்பட்டு போனார். இதை என்னிடம் சொல்லி விட்டு “ஸ்ரீஸ்வாமிஜியே அந்த பையனுக்கு அருளுவதற்காக, என்னை அந்த படத்தை வாங்க வைத்திருக்கிறார். அதே படத்தின் மூலம் என்னிடம் அவர் பேசியதாகவும் உணர்கிறேன்” என்றார் ஆனந்த்.

இது மட்டுமின்றி இதை ஒட்டி மற்றொரு விஷயமும் சொன்னார் அவர். ஆனந்த் அவர்களுக்கு மாணிக்கவாசகரின் ப்ரசித்தியான சிவபுராணம் மிகவும் பிடிக்கும். அதை ஸ்ரீஸ்வாமிஜி முன்பாக

உருக்கமாக சொல்வார். ஸ்ரீஸ்வாமிஜியும் அதை கேட்டு சந்தோஷிப்பார்கள்.

சமீபத்தில் மஹாசிவராத்திரி (பிப்ரவரி 20) அன்று ஆனந்த், ஆஸ்ரமம் வருவதாக முடிவு செய்திருந்தார். ஆனால் அலுவலக வேலை காரணமாக போக முடியாமல் போய் விட்டது. அவருக்கு மிகவும் வருத்தம். அப்பொழுது அவர் மனைவி அவரிடம் "நீங்கள்தான் குருநாதர் திருவுருவப்படம் வேறு அல்ல; அவர் வேறு அல்ல என்பீர்களே. நாம் அவர் திருவுருவப்படம் முன்பு அமர்ந்து சிவபுராணம் சொல்வோம்" என்றார். அப்படியே ஆனந்தும் செய்தார்.

சிவராத்திரிதான் கன்யாகுமரி ஸ்ரீஜயஹனுமாரின் பிரதிஷ்டா தினம். அன்று ஆஸ்ரமத்தில் கன்யாகுமரி ஜயஹனுமாருக்கு விசேஷ பூஜையும், அபிஷேகமும் நடந்தது. வடைமாலை சாற்றப்பட்டது. ஏராளமானோர் வந்திருந்தனர். இரவு, மிக அழகாக வேதபாராயண கோஷத்துடனும், நாமகீர்த்தனத்துடனும் பூஜை செய்தார் ஸ்ரீஸ்வாமிஜி. பூஜையில் கலந்து கொள்வதே ஆனந்தம் என்பார்களே, அன்று அது சுலபமாய் பலருக்கு புரிந்திருக்கும்!

சில நாட்கள் கழித்து ஒருநாள் சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஆனந்தை பார்த்தபொழுது, தனியே அழைத்து அவரிடம் என்ன சொன்னார் தெரியுமா? "நான் ஆஸ்ரமத்தில் பூஜை செய்தபொழுது நீ இல்லையே என நினைத்தேன்" என்று சொல்லி இருப்பார் என்றுதானே நினைக்கிறீர்கள். இல்லை, இல்லை.

" நீ சிவபுராணம் அடிக்கடி என் முன் சொல்வாயே, அதையே மஹாசிவராத்திரியன்று நினைத்து கொண்டிருந்தேன்" என்றார் ஸ்ரீஸ்வாமிஜி. ஆனந்துக்கு அது நெஞ்சை மிகவும் தொட்டது. இந்த சம்பவங்களை அவர் என்னிடம் சொன்னபொழுது, நானும் சந்தோஷப்பட்டேன்.

"*தேசனே தேனாரமுதே, சிவபுரனே, பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே, நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெட, பேராது நின்ற பெருங்கருணை பேராறே, ஆராவமுதே*" என்றெல்லாம் குருநாதர் முன்னால் ஆனந்த் சொல்வதை, அப்பொழுது நினைவுகூர்ந்தேன்.

## வ்ருத்திம் கர்நாடக கதஹா - 3

ஸ்ரீராமானுஜம்

கொல்லூர் சென்று சேர்ந்த பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி கிளம்பும்பொழுது சொன்னபடியேதான் இருந்தது. கோவிலில் ஏக கூட்டம். மூகாம்பிகையை தரிசிக்காமலேயே, கோவிலை மட்டும் பிரதக்ஷிணம் செய்துவிட்டு, ராமச்சந்திரபுரத்திற்கு திரும்பி விட்டோம். தான் முன்னர் அங்கு வந்திருந்தபொழுது, கோவிலில் கூட்டமே இல்லாமல் இருந்ததாக ஸ்ரீஸ்வாமிஜி தெரிவித்தார்கள்.

கொல்லூரிலிருந்து திரும்புகையில் சாலையில் கொடசத்ரி என்ற ஒரு பலகை தென்பட்டது. இந்த இடத்தில்தான் ஸ்ரீமத்பாகவதத்தில் வரும் பகவத் அவதாரமான ரிஷபதேவர் ப்ரும்மானுபவத்தில் சுகித்திருந்தார் என்று ஸ்ரீஸ்வாமிஜி தெரிவித்து விட்டு, அவரை பற்றிய மேலும் சுவையான தகவல்களை பகிர்ந்து கொண்டார்கள். உடனே எங்களை பாகவதத்தில் ரிஷபதேவர் அவதாரத்தை பற்றி சொல்லியிருப்பதை படிக்கவும் சொன்னார்கள்.

மேலும் சிறிது தூரம் சென்றவுடன் ஸ்ரீஸ்வாமிஜி தனக்கே உரிய பாணியில் “இவ்விடமானது தென்னகத்து சிரபுஞ்சி என்று பெயர் பெறும். தென்னிந்தியாவில் இங்குதான் அதிக மழை பொழிகிறது” என்றார். நாங்கள் அது எந்த இடம் என்று வலைதளத்தை பார்க்க, அது அகும்பே என்று தெரிவித்தது.

வரலாறு என்பது பூகோளத்தில் நிகழ்வதுதானே! ஸ்ரீமத்பாகவதம் தேவநாகரியில் சொல்லும் வரலாற்றை குருநாதர் தமிழில் சொல்கிறார்! குருநாதர் அருள் மழை பொழிந்து கொண்டு இருக்கிறார். மழை பெய்யும்பொழுது குளிர்விக்கும். குருநாதரின் இனிமையான வசனங்களோ நினைக்கும்தோறும் குளிர்விக்கும். மழைநீர் மிக சுத்தமானது. கங்கை அதனினும் சுத்தமானது. கங்கை புனிதமானது. கங்கைக்கு துல்லியமான குருநாதரின் ‘சொல்-அம்ருதம்’ என்னும் மழையில் அன்பர்கள்

நனைந்தவாறல்லவா இருந்தனர்!

மடத்திற்கு திரும்புகையில் இரவாகி விட்டது. மறுநாள் 27ஆம் தேதி. 27 மற்றும் 28 தேதிகளில்தான் நவீன்பட் அவர்களின் தந்தைக்கு பீமரதசாந்தி. பீமரதசாந்தி பற்றி விவரங்களை நான் குருநாதரிடம் வினவினேன். ஸ்ரீஸ்வாமிஜியும் அதைப்பற்றிய விவரங்களை சொன்னார்கள். சாஸ்திரத்தில் என்ன இருக்கிறது என்று மிக தெளிவுபட குருநாதர் சொல்வார். குருநாதரிடம் இருந்து கேட்டால்தான் சாஸ்திரத்தில் இருக்கும் சந்தேகங்கள் விலகும்.

ஒருவருக்கு 70வயதாகுகையில் அவருக்கு குடும்பம், சொத்து, உணவு சம்பந்தமாக பலவிதமான துன்பங்கள் ஏற்படும் என்று சாஸ்திரங்களில் சொல்லி உள்ளது. ஆயுளிற்கு சில கண்டங்கள் ஏற்படும் என்றும் உள்ளது. இதிலிருந்து ஒருவரை காக்க யஜுர்வேதத்தில் வரும் ஸ்ரீருத்ரத்தில் “ஸ்ருதி ஸ்ருதம்” என்ற ‘ருக்’கை பலமுறை ஜபிக்க வேண்டும். இந்த ஜபமானது, யாருக்காக ஜபிக்கப்படுகிறதோ அவருக்கான பலவிதமான இடர்களை நீக்கி அவருக்கு நீண்ட ஆயுளையும் நல்குகிறது. இந்த சாந்திக்கான பலன் அதன் முக்கிய தேவதையான, மஹாம்ருத்யுஞ்சயரான பீமருத்ர பரமேஸ்வரனிடத்திலிருந்து கிடைக்கிறது. இதற்கு அதிதேவதையாக மஹாவிஷ்ணுவும், பிரத்யதி தேவதையாக பிரும்மாவும், உள்ளனர். இந்த சாந்தியை ஒருவர் 70வயது ஆரம்பித்து ஆறு மாதங்களுக்குள்ளாக செய்ய வேண்டும். அதுவும் அவரது பிறந்த மாதத்தில் பிறந்த நட்சத்திரத்தில் செய்வது மிக்க நலம்.

ஒரு விதமான நோய், சில நகரங்களில் கிராமங்களில் தொற்றிக்கொண்டு விட்டால், அங்கு செல்பவர்கள் எல்லாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முன்ஜாக்கிரதையாக, தொற்று நோய் தங்களை தாக்காமல் இருக்க மருந்து, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். அது அவ்வூர்களுக்கு செல்பவரை

காப்பாற்றும். அதுபோல்தான் இந்த பீமரத சாந்தியும். 70 வயதை எட்டுபவர் இதை செய்வது நலம் தரும். எந்த ஒரு விஷயத்தையும் செய்ய சாஸ்திர பிரமாணம் மிக மிக அவசியம். சௌனக மஹரிஷியின் "சாந்தி கல்பம்" என்ற நூலில் பீமரத சாந்தியை பற்றி முழு விவரங்கள் உள்ளது" என்று விவரங்களை ஸ்ரீஸ்வாமிஜி சொல்லி முடித்தார். எல்லோரும் "என்ன ஒரு அற்புதமான சாஸ்திரங்களை நமது பண்டைய ரிஷிகள் தந்து சென்றுள்ளனர்" என்று நினைத்தோம். இப்படி நினைத்துக்கொண்டே, அனைவரும் மடத்திலிருந்து நவீன்பட்டின் வீட்டிற்கு வந்தோம்.



நவீன்பட்டின் தந்தை கோபால்பட்ஜி குடும்பத்தின் வீடு மிக அழகானது. சாலையை விட்டு கீழே இறக்கமாக இருந்த அதனை சுற்றி ஒரே அழகான காட்சிதான். நவீன்பட்டின் குடும்பத்தார் அனைவரும் மிக உற்சாகமாக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை வரவேற்றார்கள். யோகேஷ்பட்டின் சித்தப்பா ஒருவர் ஸ்ரீஸ்வாமிஜியை தமது வீட்டிற்கு அழைத்தார். அது மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் அந்த வீட்டிற்கு அனைவரும் சென்றோம். அங்கு சென்றபிறகுதான், எதேச்சையாக நிகழ்வது போல் தோன்றும் விஷயங்களில், ஆழ்ந்த காரணம் இருப்பது எல்லோருக்கும் புரிந்தது.

(மதுர யாத்திரை தொடரும்)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி : தீயவற்றை நினைக்காதே; தீய செயல்களை செய்யாதே - என்று ஒரு மனது ஸ்திரமாக சொல்கிறது. இருப்பினும் மனதின் மற்றொரு பங்கு, எப்படியோ தவறான வழிகளில் செல்கிறது. இந்த இருவிதமான மனதின் போக்கை எப்படி மாற்றுவது?

பதில் : காமம், பொறாமை போன்ற துர்க்குணங்கள் உடன்பிறந்தவை என்பதையும், அவற்றை சுலபத்தில் வெல்ல முடியாது என்பதையும் நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இருந்தாலும், அவற்றை வெல்வது அவசியம்தான். மனதின் இயல்புதான் இது. இது இரட்டை சிந்தனைகள் அல்ல. மனதில் தீய வாசனைகள் தோன்றுகின்றன. அறிவோ, அதை பார்த்து நமக்கு எச்சரிக்கை செய்கிறது. இரண்டும் மனதுதான். உதாரணத்திற்கு பார்த்தோமானால், ஒரு சர்க்கரை நோயாளிக்கு இனிப்புகளை பார்த்தால், சாப்பிட வேண்டும் என்று ஆசை தோன்றுகிறது. அதை சாப்பிட்டால், கஷ்டப்பட வேண்டியிருக்கும் என்று அதே சமயத்தில் அறிவானது, எச்சரிக்கையும் கொடுக்கிறது. மீறி சாப்பிட்டால் துன்பம் வருகிறது. சாப்பிடாமல் இருக்க மனோபலம் (Will Power) அவசியம். அறிவு வெல்கிறதா அல்லது வாசனை வெல்கிறதா என்பது, இந்த மனோபலத்தை பொறுத்தது. இதையும் கடவுளிடம் பிரார்த்தனை செய்துதான் பெற முடியும்.

கேள்வி : உலகம் என்பது கடவுளின் அற்புதமான படைப்பு அல்லவா? அப்படி இருக்க, இவ்வுலகில் மனிதர்களிடம் ஏன் இவ்வளவு எதிர்மறையான சிந்தனைகள் காணப்படுகின்றன? இது கலியுகத்தினாலா அல்லது மனிதர்களின் மனதினாலா?

பதில் : ‘கலி’ என்பது மனதில் இருப்பதுதானே? அது மனிதர்களை விட்டு விலகி இருக்கும் ஒன்று அல்ல. மனதில் இருக்கும் ‘கலி’தான் இத்தகைய எதிர்மறையான சிந்தனைகளை (Negative approach) தோற்றுவிக்கிறது. இந்த யுகத்தில் இருக்கும் மனிதர்கள் இப்படித்தான் இருப்பர் என்றும் நமது புராணங்கள் தெரிவிக்கின்றன. அதே புராணங்கள்தான், எளிமையான மஹாமந்திரகீர்த்தனம் செய்து ஒருவன் இதிலிருந்து விடுபட முடியும் என்றும் தெரிவிக்கின்றன.

கேள்வி : நான் எனது வேலையை நேர்மையாகவும், சிரத்தையுடனும் செய்து வருகிறேன். இருந்தாலும் எனக்கு வேலையில் திருப்தியோ அல்லது உயர்வோ கிடைக்கவில்லை. என் மனம் அமைதியில்லாமல் தவிக்கிறது. ஒரு வழி சொல்லுங்கள்.
பதில் : அமைதியானது உங்களுக்கு உள்ளே எப்பொழுதும் இருக்கிறது. அதை நீங்கள் வெளியில் தேடினாலோ, அல்லது உங்கள் செயல்களில் தேடினாலோ, அந்த அமைதி நிரந்தரமாக இருக்காது. மஹாமந்திரம் ஜபித்து வாருங்கள். உண்மையான அமைதியை நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வீர்கள்.

கேள்வி : பித்ரு தர்ப்பணங்களை ஒவ்வொரு அம்மாவாசையின்பொழுதும் செய்வது அவசியமா? சிலர் கயாவில் தர்ப்பணம் செய்து விட்டால், அதன்பின் தர்ப்பணம் செய்வது அவசியம் இல்லை என்கின்றனரே? இது சரியா?
பதில் : கயா க்ஷேத்திரத்திலே செய்திருந்தால் கூட, காலம் தவறாமல், பித்ரு தர்ப்பணம் செய்வது அவசியம்.

**"Azhaikkindraan Arangan"**

Starting from April 2nd, a series of discourses titled 'Azhaikkindran Arangan' by Sri Swamiji will be telecast on Star Vijay TV every morning at 7:15 am.



# பாகவத பழம் (25)

**பாகம் 2 – அத் 9**

– ஸ்ரீஸ்வாமிஜி

பகவான் கிருஷ்ணன், நான் என் சரீரத்தை விடும் வரையில் காத்திருக்கட்டும் என்று ப்ரார்த்திக்கின்றார் பீஷ்மர். அம்புப் படுக்கையில் படுத்திருந்த பீஷ்மரிடம், பலவிதமான தர்மங்களைக் கேட்டு அறிந்தார் தர்மபுத்திரர்.

பீஷ்மரும் தான தர்மம், ராஜதர்மம், மோக்ஷதர்மம், ஸ்த்ரிகளுக்கான தர்மம், பாகவத தர்மம் என்று அனைத்தையும் உபதேசிக்கின்றார். இந்த சந்தர்ப்பத்தில் தர்மபுத்திரர் எந்த ஒரு தர்மம் எல்லா தர்மங்களையும் காட்டிலும் மேலானது என்று வினவ, பீஷ்மர், பகவானின் நாம ஸங்கீர்த்தனமே ஸர்வ சிரேஷ்டமான தர்மம் என்று சொல்லி விஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்று சொல்லப்படும் பகவானின் ஆயிரம் நாமங்களை எடுத்துச் சொன்னார். மேலும், இந்த ஆயிரம் நாமங்களும் எதிரில் நிற்கும் இந்த க்ருஷ்ணனுடையதே என்றும் கூறினார்.

இப்படி சகல தர்மங்களையும் கூறிக் கொண்டிருந்த பொழுது பீஷ்மர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த உத்தராயண புண்யகாலம் நெருங்கியது.

இதை அறிந்த பீஷ்மர் தன் ப்ரவசனத்தை நிறுத்திக்கொண்டார். இமைக்காத கண் உடையவராக பகவான் கிருஷ்ணனையே பார்த்தார். பகவத் த்யானத்தால் சகல பாபங்களும் போக்கடிக்கப்பட்டு, பகவானின் கடாக்ஷத்தினால் உடலில் இருந்த வேதனையும் நீங்கியவராய், பீஷ்மர் பகவானைப் பார்த்து துதிக்கலானார்.

பதினொன்று ஸ்லோகங்கள் கொண்ட இந்த துதி பீஷ்ம ஸ்துதி என்று புகழ் பெற்றது. இந்த ஸ்துதியில் பீஷ்மருக்கு பெரும்பாலாக க்ருஷ்ணனை யுத்தத்தில் சந்தித்ததே த்யானத்திலிருப்பதால் அவ்வாறான வர்ணனைகளே உள்ளன. பார்த்தனுக்கு தேர்த்தட்டில் ஸாரதியாக இருக்கும் அந்த பகவானை பீஷ்மர் எப்படியெல்லாம்

ரஸித்து அனுபவித்திருக்கிறார் என்றும் எப்படி பார்த்தசாரதியின் த்யானமே அவருக்கு சித்தித்திருக்கிறது என்றும் நன்கு தெரிகிறது.

*இதி மதிருபகல்பிதா வித்ருஷ்ணா*
*பகவதி ஸாத்வத புங்கவே விபூம்னி*
*ஸ்வஸுகம் உபகதே க்வசித் விஹர்தும்*
*ப்ரக்ருதிம் உபேயுஷி யத்பவ ப்ரவாஹ: (1.9.32)*

பீஷ்மர் பகவானிடம், க்ருஷ்ணா! ஆசையற்றதான என் புத்தியை நான் உன் சரணத்தில் ஸமர்ப்பிக்கின்றேன்! என்கின்றார். புத்தியால் பகவானைப் பிடிக்கமுடியாது. புத்திக்கும் அப்பாற்பட்ட பகவானிடம் புத்தியை ஸமர்ப்பணம்தான் செய்யமுடியும். “அதை ஏற்றுக்கொள்வதோ அவன் கையில்” என்று வினயமாக சமர்ப்பிக்கின்றார். எப்படிப்பட்ட புத்தி என்று கூறுகின்றார் பீஷ்மர். பகவானைத் தவிர வேறெதிலும் ஆசை இல்லாத புத்தியாம். அந்த நிர்மலமான புத்தியை எந்த பரமாத்மா மூவுலகங்களையும் லீலையாகப் படைத்து, காத்து, அழிக்கின்றாரோ, அவரிடம் சமர்ப்பிக்கின்றார். பகவானின் மகிமை அறிந்து செய்யக்கூடிய பக்தி சிறந்ததாகக் கருதப்படுகிறது. அந்த பகவான் மகிமை வாய்ந்தவன் மட்டும் அல்லாமல் அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் அழகு படைத்தவன் என்று வர்ணிக்கின்றார்.

*த்ரிபுவன கமனம் தமாலவர்ணம்*
*ரவிகர கௌரவராம்பரம் ததானே*
*வபுரலக குலாவ்ருதானனாப்ஜம்*
*விஜயஸகே ரதிரஸ்து மே அனவத்யா (1.9.33)*

மூவுலகங்களிலும் க்ருஷ்ணா உன்னைவிட அழகானவர், வேறொருவர் இல்லை. தமால வ்ருக்ஷம் போன்ற உன் சரீரமும், அதில் சூரியனது ஒளிபோன்ற மஞ்சள் பட்டும், உன் நெற்றியில் விழுந்திருக்கும் அழகான சுருள் சுருளான கேசமும் என் நெஞ்சை மயக்குகின்றது. அர்ஜுனனின் தோழனே! உன்னிடம் எனக்கு அளவற்ற பிரேமை

என்றும் இருக்கட்டும். இந்த அழகை பீஷ்மர் எங்கு கண்டார்? போர்க்களத்தில் எதிரியின் சேனையில் இருந்து கொண்டு அர்ஜுனனுக்கு தேரோட்டியாக இருந்த கிருஷ்ணனை அப்படி அனுபவித்தார் பீஷ்மர். குதிரைகளின் கால் தூசி கிருஷ்ணன் மேல் பட, வியர்த்திருந்த அவன் திருமுகத்தில் கேசங்களோடு இவை கலந்து, அவன் முகத்தாமரையில் மகரந்தம் போல் இருந்ததாம்! அப்படி விழுந்த அந்த கேசங்களை அவன் அலாதியான ஒரு எழிலுடன் கைகளால் சரி செய்து கொண்டானாம்.

இப்படி கிருஷ்ணனின் அழகை வர்ணித்து வந்த பீஷ்மர், கிருஷ்ணா! அந்த போர்க்களத்தில் என்னால் ஏவப்பட்ட அம்புகளால் உன் கவசம் உடைந்துபோக உன் திருமேனியின் தரிசனம் பெற்றேனே! அப்பேற்பட்ட கருணாமூர்த்தியான உன்னிடத்தில் எனது மனது என்றென்றும் நிலைத்திருக்கட்டும் என்கின்றார்.

*புத்தியால் பகவானைப் பிடிக்கமுடியாது. புத்திக்கும் அப்பாற்பட்ட பகவானிடம் புத்தியை ஸமர்ப்பணம்தான் செய்யமுடியும்.*

ஒவ்வொரு இரவும் போருக்குபோகும்முன் அம்புகளைத் தீட்டுவாராம் பீஷ்மர். அர்ஜுனனை அடிக்க அல்ல அவை! கிருஷ்ணனுக்குத்தான். ஸாக்ஷாத் பகவான் எதிரே நிற்கும்பொழுது அவனை பூஜிக்க வேண்டாமா? ஆனால் போர்க்களத்தில் எதைக்கொண்டு பூஜிப்பது? அம்புகள் தானே இருக்கும். ஆகையால் பீஷ்மர் ஒவ்வொரு அம்பையும் குறிபார்த்து, ஸஹஸ்ரநாமங்கள் கூறியவாறே, கிருஷ்ணன் மேல்படும்படி அடிப்பார். பகவானும், நாமங்கள் கூறி அடிப்பதால் அவை தனக்கே உரிய நாமங்கள், ஆதலால், வேறு எங்கும் தப்பிப்படாமல் தன்மேலே படும்படி ஏற்றுக்கொள்வார். அந்தக் கருணையை வர்ணித்து மகிழ்கின்றார் பீஷ்மர்.

“கிருஷ்ணா! போர் துவங்கும்முன் அர்ஜுனன் தேரை இரு சைன்யங்களின் நடுவில் கொண்டு நிறுத்தச் சொன்னான். நீயும் அப்படியே செய்தாய். அவன் எதிரியின் சைன்யத்தில் உள்ளவர்கள் யார் யார் என்று தெரிந்துகொள்ள விரும்பினான்.

உனது ஒரு கையில் குதிரையின் கடிவாளம் இருக்க, மற்றொரு கையில் சாட்டை இருக்க, நீ உன் கண்களாலேயே, அதோ பீஷ்மர்! அங்கே துரோணர்! என்று ஜாடை காட்டினாயே! அந்தப் பார்வையாலேயே எங்கள் உயிரையும் குடித்துவிட்டாய்! அந்த கடாக்ஷம் பெற நாங்கள் செய்த புண்ணியம்தான் என்ன! பார்த்தனின் தோழா! உன் சரணத்தில் எனக்கு பரம ப்ரேமை உண்டாகட்டும்.

அப்படி நீ உன் கண்களால் எதிரி சைன்யத்தைக் காட்டியபொழுது அர்ஜுனன் அந்த சைன்யத்தில் உள்ளவர்களை எதிரிகள் என்று பார்க்காமல் தாத்தா, குரு, சகோதரர்கள் என்று பந்துக்களாகப் பார்த்ததால் பாசம் ஏற்பட, யுத்தம் செய்யமாட்டேன் என்று வில்லைக் கீழே வைத்தான். அக்ஞானத்தாலும், பாசத்தினாலும் ஏற்பட்ட, இந்த ஒரு துர்புத்தியை நீ கீதோபதேசம் செய்து போக்கினாய். ஆத்ம வித்யையை உபதேசித்த உன் திருவடிகளில் எனக்கு பக்தி உண்டாகட்டும்.

இப்படி அர்ஜுனனின் தோழா, பார்த்தனின் தோழா என்று தன் பேரனான அர்ஜுனனின் பெயரை வைத்தே பகவானை அழைக்கின்றார் பீஷ்மர். ஏனென்றால், அர்ஜுனன் பகவானுக்கு மிகப் பிரியமானவன். தான், அவனுடைய தாத்தா, என்று நினைவூட்ட அப்படி அழைக்கின்றார் பீஷ்மர்.

(கனியும்)

# வேலை தருவது அவன் வேலை!

ருத்ரேசன்

பல ஊர்களில் பல பிரார்த்தனை கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதில் பலர் கலந்து கொண்டு பயன் பெறுகின்றனர். திரு.பம்மல் பாலாஜி என்னிடம், "மக்களின் கஷ்டங்கள் எப்படி இருக்கிறதென்றால், அவர்கள் வந்து சொல்லி அழுகின்றனர். அதிலும் எப்படிப்பட்டவர்கள் எல்லாம் வருகிறார்கள் என்றால், ஸ்ரீனிவாசனை தெய்வம் என்று அறியாதவர்களும் கூட வருகின்றனர். அவர்களுக்கும் பலன் கைமேல் கிடைக்கிறது" என்றார். அவர் என்னிடம் சொன்னதை சுருக்கமாக அவர் சொல்வதாகவே இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

பிப்ரவரி 24 வாக்கில் பெரியகுளம் பகுதியில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். அப்போது சேரன்மகாதேவியிலிருந்து பாலு என்பவர் வந்திருந்தார். பிப்ரவரி 1ஆம் தேதி சேரன்மகாதேவியில் ஒரு பிரார்த்தனை கூட்டம் இருந்திருந்தது. இதில் கலந்து கொண்ட ஒரு சகோதரி மூன்றரை வருடங்களாக தம்மிடமிருந்து பிரிந்திருந்த தம் கணவர் மறுபடி ஒரே வாரத்தில் வந்து சேர்ந்தார் என்பதை தெரிவிக்க சொன்னதாக பாலு சொன்னார்.

பெருமாளின் மனம் இதைக்கேட்டு, எவ்வளவு சந்தோஷப்படும் என்றால் அந்த சகோதரியின் தந்தையின் மனம் போல் அல்லவா? மானசீகமாக பெருமாளுக்கு அந்த சகோதரியின் சார்பாக நன்றி தெரிவித்தேன்.

அப்பொழுது பாலு "நான் உங்களுக்கு தேவையான சிறு சிறு உதவிகளை கூடவே இருந்து செய்கிறேன். எனக்கும் நல்ல வேலை கிடைக்க பெருமாளிடம் பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார். லக்ஷ்மிபுரத்தில் அன்று பிரார்த்தனைக்காக வந்திருந்த கூட்டம் வேறு அதிகமாக இருந்தது. பாலுவிடம் நானும் சரி என்றேன். எல்லாம் பெருமாள் இஷ்டம். நான் தலை ஆட்டினேன்

அவ்வளவுதான்.

மதியம் பெங்களூரிலிருந்து அரவிந்தன் என்பவர் தொலைபேசியில் அழைத்து "ஜனவரி பத்தாம் தேதி பெரியகுளத்தில் நடந்த பிரார்த்தனையில் எனக்கு வேலை வேண்டி, நான் பிரார்த்தனை செய்தேன். எனக்கு பெரிய கம்பெனியில் வேலை கிடைத்தாகி விட்டது" என்று கூறி மகிழ்ந்தார்.

அப்பொழுது பாலுவும் அருகில்தான் இருந்தார். அவர் தனக்கு எப்பொழுது வேலை கிடைக்குமோ என்று வருத்தப்பட்டார். ஒரு அரைமணி கூட ஆகி இருக்காது. பாலுவுக்கு உடனேயே நெல்லையில் ஒரு கட்டுமான கம்பெனியிலிருந்து நேர்முக தேர்விற்கு அழைப்பு வந்தது. உடனே நெல்லை கிளம்பினார். இதுவும் பெருமாளின் செயல்தான். அதற்கும் நான் சரியென்று தலை ஆட்டி, பெருமாள் பிரசாதம் கொடுத்து அனுப்பினேன். மறுநாளே வேலையும் கிடைத்தது. அதுவும் பெருமாளின் கருணைதானே!

26ஆம் தேதி தேனியில் உள்ள மாணவியர் விடுதியில் நடந்த கூட்டுபிரார்த்தனையில் கலந்து கொண்டேன். இதன் பின்னர் வத்தலகுண்டு, கெங்குவார்பட்டி, தாராபுரம் ஆகிய இடங்களில் பிரார்த்தனை செய்து விட்டு நேரே பாலக்காட்டிற்கு 29ஆம் தேதி சென்றேன். அங்கு இரு நாட்கள் பிரார்த்தனை.

பாலக்காட்டில் பிரமோத் என்பவர் வந்து, தனக்கு ஒரு அரசு நிறுவனத்தில் இருந்து வேலை கிடைப்பது தாமதமாகி கொண்டே இருப்பதாக சொல்லி வருத்தப்பட்டு சொல்லி சென்றார். நானும் அவருக்காக பிரார்த்தித்தேன். அன்று மாலையே அவர் வந்து "மதியம் ஃபேக்ஸிலேயே ஆர்டர் வந்து விட்டது. எனக்கு ஒரே சந்தோஷம்" என்றார்.

எனக்கு ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எல்லாம் பெருமாள் நடத்திக்காட்டியதுதான். ஆனாலும், "ஒரே தினத்தில்; அதிலும்

ஃபேக்ஸில் ஆர்டர்; எல்லாவற்றிற்கும் என்ன அர்த்தம் ஸ்ரீனிவாசா? நான் கேட்டு கொண்டிருக்கிறேன் என்றுதானே அர்த்தம்? கல்யாண ஸ்ரீனிவாசா உனது விளையாட்டில் எனக்கு ஒரு பங்கு. உன் பக்தர்களுக்கு சுகம் தருகிறாய். நீயும் அதில் சுகம் பெறுகிறாய். அதை பார்க்கும் சுகத்தை எனக்கும் தருகிறாய்" என்று நினைத்துக்கொண்டேன்.

அன்று ஒரு அம்மா வந்திருந்தார். அவருக்கு ஏதேதோ உடல் உபாதைகள். எல்லாம் சொல்லி வருத்தப்பட்டார். அதன்பின் "என் மகனுக்கு பதவி உயர்வு ஆக இருக்கிறது. ஆனால் அதில் வேறு ஊருக்கு மாற்றல் ஆகி உத்தரவு வந்தால் வேலையை விட்டு விடுவேன் என்கிறான். பிரார்த்தனை செய்யுங்கள். அவனுக்கு இட மாற்றமில்லாமல் பதவி உயர்வு வேண்டும்" என்றார்.

இது வித்தியாசமான பிரார்த்தனை. பிரார்த்தனை நன்மைக்குத்தான் இருக்க வேண்டும். அவ்வளவுதான். அதற்குமேல் அது எப்படி இருக்க வேண்டும் என்று நான் எப்படி சொல்வது.

பிரார்த்தனை செய்யவேண்டியது என் கடமை. "சீனிவாசா! பார்த்து கொள்! இவர்களின் கஷ்டம் அவர்களின் ஹிருதயத்தில் இருக்கும் உனக்குத்தான் நன்கு புரியும்" என்று பிரார்த்தித்தேன். அவர்களை பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருந்தது. அவர் மிகவும் வருத்தப்பட்டு சொன்னதையே மீண்டும், மீண்டும் சொல்லி கொண்டிருந்தார். ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தேன்.

சாயங்காலம் பார்த்தால் அவர் மறுபடி வந்திருந்தார். ஏதேது மறுபடி அதையே சொல்ல போகிறாரோ என்று நினைத்தால் புன்முறுவலுடன் "என் மகனுக்கு இதே ஊரில் பதவி உயர்வு கிடைத்து விட்டது" என்றார். மறுநாளே அந்த அம்மாவின் சொந்த தம்பிக்கும் பாலக்காட்டிற்கே வேலை மாற்றல் வந்து விட்டது என்றும் வந்து சொன்னார். நானும் அவர்களுடன் சேர்ந்து மகிழ்ந்தேன்.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## குருவின் மனம்

ஒரு குருவிற்கு பல சீடர்கள் இருந்தனர். அந்த குரு எல்லோரிடமும் பிரியமாக இருப்பார். அவரது சீடர்களில் ஒருவன் போக்கிரியாக இருந்தான். எப்பொழுதும் பிறருக்கு ஏதாவது துன்பம் தந்து வந்தான். அவனை பற்றி பிற சீடர்கள் குருவிடம் புகார் தந்தவாறே இருந்தனர். ஆனால் குருவோ கொஞ்சமும் அதை கண்டு கொள்ளவே இல்லை. அந்த சீடனிடம் எப்பொழுதும் போல், அன்பு பாராட்டி வந்தார். அவரது அன்பானது மாறவே இல்லை.

குருவின் மற்ற சீடர்களுக்கு இது ஏற்புடையதாக இல்லை. சீடர்கள் அனைவரும் சேர்ந்து முடிவு செய்து, அவனை எப்படியாவது வெளியேற்றி விடுவது என்று முடிவு செய்தனர். சீடன் தவறு செய்கையில் கையும் களவுமாக பிடித்து விட்டால், குருவே அவனை வெளியே அனுப்பி விடுவார் என்று அவர்கள் நினைத்தனர். எல்லோரும் ஜாக்கிரதையாக இருந்து, அந்த சீடன் மறுபடி தவறு செய்கையில், அவனை பிடித்து குருவிடம் ஒப்படைத்து விஷயத்தை சொன்னார்கள். குரு அந்த சிஷ்யனை கண்டிக்கவில்லை. என்ன விஷயம் என்று கேட்கவும் இல்லை. இதைக்கண்டு பிற சீடர்களுக்கு கடும் கோபம் வந்தது.

அவர்கள் ஒன்றாக கூடி குருவிடம் சென்று “நீங்கள் அவனை வெளியில் அனுப்பாவிடில், நாங்கள் எல்லோரும் சென்று விடுகிறோம்” என்றனர். குரு அதை கேட்டு, சிறிது நேரம் அமைதியாக இருந்தார். அப்புறம் சொன்னார். “உங்கள் எல்லோருக்கும் எது தவறு, எது சரி என்று ஓரளவிற்கு தெரிந்து இருக்கிறது. ஆதலால் நீங்கள் வெளியில் போனால் பரவாயில்லை. ஆனால் பாவம், அவனுக்கு எது நல்லது என்று தெரியவில்லை. அவனை வெளியில் அனுப்பி விட்டால், அவன் மேலும் அல்லவா உலகில் துன்பப்படுவான். அவனுக்கு என்னை விட்டால் யார் இருக்கிறார்கள்? நீங்கள் எல்லோரும் வெளியில் செல்வதாக

இருந்தாலும், அவனை நான் அனுப்புவதாக இல்லை” என்றார்.

குருவின் இந்த பேச்சை கேட்டதும், அவரது அன்பு உள்ளத்தை அறிந்து, சீடர்கள் அனைவரும் தலைகுனிந்தனர். அது மட்டுமல்ல, இதை கேட்டு கொண்டிருந்த, அந்த போக்கிரி சீடனின் கண்களில் நீர் பெருகியது. இனி தவறே செய்வதில்லை என்று அவன் முடிவு செய்தான். அப்படியே இருக்கவும் ஆரம்பித்தான்.

சனாதனப் புதிர் - பகுதி - 38 — ஆத்ரேயன் ( விடைகள் அடுத்த இதழில்)

1. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பார்க்க விரும்பிய மஹாபுருஷர் யார்? சந்திப்பு எப்பொழுது நடந்தது?

2. ஈஸ்வர சந்திர சர்மாவுக்கு, வித்யாசாகர் என்ற பட்டம் வழங்கியது யார்?

3. வித்யாசாகர் செய்த முக்கியமான சீர்த்திருத்தங்கள் என்ன?

4 ராமர், தூஷணனோடு சண்டையிடும் சமயம், ஏவிய பாணங்களின் பெயர்கள் என்ன?

5. கரன் ஸ்ரீராமரால் கொல்லப்பட்டு பூமியில் விழுந்ததை வால்மீகி எப்படி வர்ணிக்கிறார்?

6. ஜனஸ்தானத்தில் இருந்த கரன், தூஷணன் மற்றும் 14000அசுரர்கள் கொல்லப்பட்டதை ராவணனிடம் முதலில் தெரிவித்தது யார்?

7. ராவணனுக்கு சீதையை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை முதலில் ஏற்படுத்தியது யார்?

8. இந்திரன் மற்றும் குபேரன் இவர்களின் பூந்தோட்டங்கள் பெயர் என்ன?

9. சுக்ரீவனது தந்தையின் பெயர் என்ன?

10. விருபாக்ஷன், மஹோதரன், மகாபார்ச்வன் இவர்கள் யாரால் கொல்லப்பட்டனர்?

# நாமம் தந்த நிதி!

டாக்டர். வாசுதேவன் – பாலக்காடு நாமத்வார்

ராகவன் என்ற அன்பர், ஒரு வங்கியில் வேலை பார்த்து வந்தார். அவரது உத்தியோகத்தில் அவருக்கு தங்க நாணயங்கள், மியுட்டியுவல் நிதி மற்றும் ஆயுள் காப்பீடு சம்பந்தமான டெபாசிட்டுக்களை விற்க வேண்டும். அவருக்கு ஒரு ஏழெட்டு மாதங்களாக இதில் சரிவர வெற்றி பெற முடியவில்லை.


இப்படி எல்லாம் இருந்தால் அலுவலகத்தில் என்ன செய்வார்கள்? "நீ சரியாக வேலை செய்யவில்லை" என்று ஒரேயடியாக சொல்லி விடுவார்கள். நமது முயற்சி சரியாகத்தான் இருந்திருக்கும். ஆனால், எல்லாம் சரியாக முடிய திருவுள்ளம் இருக்க வேண்டுமே? ராகவன் சரியாக முயற்சி செய்திருந்தாலும் எதுவும் அமையவில்லை. இவரது மேலதிகாரியோ இவரிடம், “நீ சரியாக வேலை செய்யவில்லை” என்பதை நேராக சொன்னதோடு மட்டும் நின்று விடாமல், அதை அலுவலகத்தில் உடன் பணிபுரிவோர் மூலமாகவும் இவரிடம் சொல்லி வந்தார்.

இதனால் ராகவனுக்கு மனக்குழப்பமும், மன உளைச்சலும் வெகுவாக இருந்தது. உறக்கமும் சரியாக வரவில்லை. எதனால் தான் செய்யும் முயற்சிகள் கைகூடவில்லை என்பதும் அவருக்கு புரியவில்லை. ஆனால் அடிக்கடி நாமத்வார் வருவார். மஹாமந்திரம் சொல்லுவார். அடிக்கடி, என்னிடமும் ஸ்ரீராமானுஜம் மூலமாகவும் குருநாதரிடம் தனது மனக்கஷ்டத்தை சொல்லி பிரார்த்திக்க சொல்வார்.



மார்கெட்டிங்கில் “டார்கெட் தினம்” என்று வைப்பார்கள். அந்த தினத்திற்குள்ளாக நீங்கள் வியாபாரத்தில் ஒரு குறிப்பிட்ட

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

இலக்கை எட்டி விட வேண்டும். இல்லை எனில், நீங்கள் மேற்கொண்டு முன்னேற முடியாது. அப்படி ராகவனுடைய அலுவலகத்திலும் டார்கெட் தினம் வைத்திருந்தார்கள். அவருடைய டார்கெட்டை அவரால் எட்ட முடியவில்லை.

ராகவன் மஹாமந்திரம் தொடர்ந்து சொல்லி வந்தார். அதை சொல்லி சொல்லி பிரார்த்தித்து வந்தார். ஒரு நாற்பது நாட்களாக வெளிநாட்டிலுள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டு வர்த்தக முதலீடு செய்ய கோரி வந்திருந்தார் ராகவன். அந்த நபர் பிடியே கொடுக்கவில்லை. ராகவனும் "சரி நமக்கு எது நன்மையோ அதையே நாமமும் குருநாதரும் செய்வர்" என்று மனதை கட்டுப்படுத்தி வந்தார்.

அலுவலகத்தில் இருக்கும் பளு ஆனது பெரிதாகி கொண்டே வந்தது. இந்த வெளிநாட்டு முதலீடு வந்தால், அலுவலக பளு விலகி விடும். அதனால் அது கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை, நாம கீர்த்தனம் என மாற்றி மாற்றி செய்து வந்தார் ராகவன். சரியாக டார்கெட் தினத்திற்கு முந்திய தினம், அந்த வெளிநாட்டு வாடிக்கையாளர், தொலைபேசியில் கூப்பிட்டு எந்த அளவு முதலீடு செய்தால், ராகவன் மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற தடை இல்லையோ, அந்த அளவுக்கு முதலீடு செய்தார்.

எல்லாம் நன்றாக அமைந்தால், யார்தான் மாற மாட்டார்கள். மேலதிகாரி சந்தோஷப்பட்டார். அலுவலக பளு நீங்கியது. மேலும் நன்றாக வியாபாரம் செய்யலாம். எல்லாவற்றுக்கும் மேலாக எந்த மனது இவரை துன்புறுத்தி வந்ததோ, அந்த மனது இப்பொழுது ராகவனுக்கு நண்பனாகி விட்டது. மன உளைச்சல், உறக்கமின்மை, குழப்பம் எல்லாம் நீங்கியது. நிம்மதியானார் ராகவன்.

ராகவன் அதன்பின் சொன்னதுதான் ஆச்சரியம். என்ன சொன்னார் என்றால் "சரி. குருநாதர் எனக்கு நாமத்தின் மேல் நம்பிக்கை ஏற்பட வழி செய்துவிட்டார். நான் எப்படி அவருக்கு எனது நன்றியை தெரிவிப்பேன்?" என்பதுதான் அது.

# சென்ற மாத சத்சங்கங்கள்

**பிப்ரவரி 24 – 26** – பிரேமிக வித்யாகேந்திராவின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா குர்கான், ஹரியானாவில் ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்டின் சார்பாக நடைபெற்றது. இதில் **ஸ்ரீஸ்ரீ அண்ணா** அவர்கள் தமது கிரந்தமான திவ்யதேச வைபவத்திலிருந்து காலையிலும் மாலையிலும் தமிழில் உபன்யாசம் செய்தார்கள். விழாவில் **“திவ்யதேச வைபவம்”** – **ஹிந்திமொழிபெயர்ப்பும்**, **“வைஷ்ணவ சம்ஹிதை” பாராயண ஒலித்தட்டும்** வெளியிடப்பட்டது.



**பிப்ரவரி 19** – ஸ்ரீஸ்வாமிஜி படப்பை அருகே உள்ள இறையூரில் **“New Life Charitable Trust - ஆதரவற்றோர் மற்றும் குழந்தைகள் சரணாலயத்தில் மதுரவாணி – புதிய கட்டிடம்** – திறந்து வைத்து அருளுரை வழங்கினார்கள். அங்கு தங்கி இருந்தோருக்கு ஆசிகளும் வழங்கினார்கள்.

**பிப்ரவரி 26** – ஸ்ரீஸ்வாமிஜி குடியாத்தம் அருகில் **பல்லலகுப்பம் ஸ்ரீகோதண்டராமர் கோவில் கும்பாபிஷேகத்தில்** கலந்துகொண்டார்கள். அன்று மாலை குடியாத்தம் திருவள்ளுவர் மேல்நிலைப்பள்ளியில் நடந்த மஹாமந்திர கூட்டுபிரார்த்தனையில் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். சுமார் 2000 அன்பர்கள் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்றனர்.

**மார்ச் 2** – சென்னை நாரதகானசபாவில் ஸ்ரீஸ்வாமிஜி **ஸ்டார் விஜய் டி.வி. பக்தி திருவிழாவை** துவக்கி வைத்து அருளுரை வழங்கினார்கள்.

**மார்ச் 4 – மார்ச் 12** – ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் **பெங்களூர்** கல்கரே கிராம **ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில்** காலையில் ராமாயண பாராயணமும் மாலையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஸ்ரீமத் ராமாயண உபன்யாசமும் நவாஹமாக நடைபெற்றது. திரளான

அன்பர்கள் கலந்து கொண்டனர். மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் மடத்தின் ஆறாவது பீடாதிபதிகளான ஸ்ரீகுருகோதண்டராம ஸ்வாமிகளும், இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

**மார்ச்16-24** -ஸ்ரீஸ்வாமிஜி சென்னை சூளைமேடு - கில்நகரில், பல மஹான்களின் சரிதங்களை உபன்யாசம் செய்தார்கள்.

**மார்ச் 10 - அமெரிக்கா ஹூஸ்டன் நாமத்வார்** துவங்கி இரண்டு வருடம் பூர்த்தியானதை ஒட்டி அமெரிக்கா டெக்சாஸ் மாநில சுகர்லேண்டில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டு பிரார்த்தனை இடம்பெற்றது. இவ்விழாவிற்கு Mr. Andy Hoffman, Chief Operating Officer of Interfaith Ministries for Greater Houston சிறப்பு விருந்தினராக வந்திருந்தார். விழா ஆரம்பத்தில் ஸ்ரீபாதம் கலைப்பள்ளியை சேர்ந்த ஸ்ரீமதி உன்னி மற்றும் அவரது மாணவர்களின் அற்புதமான நடனமும், பின்னர் ஸ்ரீவிதுஷி ராஜேஸ்வரி பட் அவர்களின் கர்நாடக சங்கீதமும் நடைபெற்றது. விழாவில் G.O.D USA சார்பாக, மோனார்க் மற்றும் வெஸ்ட்வியூ பள்ளிகளுக்கு நிதியுதவி செய்யப்பட்டது. Both Schools provide care and education to children with neurological differences. நிறைவாக காட் இந்தியா அமைப்பை சேர்ந்த பூர்ணிமாஜி “பாரதீய கலாசாரப்படி நடன, சங்கீத கலைகளும் இறைவனின் சொரூபமே; இறைவனை கலைகளின் மூலமாக நினைவு கொள்ளுதல் மிக சிறப்பானது என்பதாலே கலைகள் கொண்டாடப்படுகின்றன” என்றும், நாமமஹிமை குறித்தும் பேசி விட்டு, ஒரு





மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும் நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிக்கு பின்னர் பூர்ணிமாஜி மார்ச் 15 -18 வரை பிரிஸ்கோ, டல்லாஸில் உள்ள கார்ய சித்தி ஹனுமான் கோவிலில் 'Ancient Wisdom for Modern Times' என்ற தலைப்பில் சுமார் 700 அன்பர்கள் முன்னிலையில் உரையாற்றினார். முன்னதாக பிப்ரவரி 25 அன்று துவாரகாமாயி ஷீரடி சாயிபாபா கோவிலில் குருமஹிமை குறித்தும், பிப்ரவரி 26 அன்று நியூ ஹேம்ப்ஷைரில் உள்ள






75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

கோவிலில் "அம்பரீஷ சரித்ரம் குறித்தும், போஸ்டன் அருகே லெக்ஸிங்டனில் மார்ச் 2 அன்று, "குருக்ருபா விலாசம்" என்ற தலைப்பில் குருவின் கருணை குறித்தும், மார்ச் 3ஆம் தேதி சின்மயா மிஷன் மாருதி கோவிலில் "Blissful path towards infinite bliss" என்ற தலைப்பிலும் குவின்ஸி நகரத்தில் ஒரு அன்பர் இல்லத்தில் "உத்தவ சந்தேசம்" என்ற தலைப்பில் பாகவதத்திலிருந்தும் பூர்ணிமாஜி பேசினார்.

**மார்ச் 8 – ஹோலி பண்டிகை – சைதன்ய மஹாபிரபு ஜெயந்தியை** ஒட்டி மஸ்கட்டில் "காட் சத்சங்கம்" சார்பாக ஸ்ரீசந்திரசேகர் இல்லத்தில் மார்ச் 8 மாலை ஆறு மணி முதல் மார்ச் 9 மாலை ஆறு மணி வரை, அகண்டமாக 24மணி நேர மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது.

**மார்ச் 12 – மலேசியா டிங்கில் – அம்பர் தெனாங் தோட்ட தமிழ் பள்ளியில்**, மலேசிய நாமத்வார் குழுவினர் மிக அழகாக **தன்முனைப்பு தூண்டல் பயிலரங்கம்** ஒன்றை நடத்தினார்கள். இதில் ராஜேஸ்வரிஜி, சுரேஷ்ஜி மற்றும் சுனிதாஜி மாணவர்களை ஊக்கமூட்டும் வகையில் பேசினர்.

rb

**rajmani builders**

launches its new project

# "rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

website: www.rajmanibuilders.com

நிகழ்ச்சியில் 33பள்ளி மாணவர்களுக்கு சீருடையும் வழங்கப்பட்டது. பெற்றோர் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சி குறித்து பாராட்டு தெரிவித்தனர். இது பல நாளிதழ்களிலும் செய்தியாக வந்திருந்தது.

**மார்ச் 17 & 18** ஸ்ரீராமானுஜம் Workshop on personality development தலைப்பில், அம்ருதா மெமோரியல் மற்றும் மும்பை சார்டட் அக்கவுண்டட் சொஸைட்டி சார்பாக மும்பை Direct-I-Plex, Andheri (East) இல் C.A மாணவர்கள் முன்பாக பேசினார்.


**சனாதனப் புதிர் : பகுதி – 37** விடைகள் –ஆத்ரேயன்

1. கலா , அனஸூயா , ச்ரத்தா , ஹவிர்பா , காதி , க்ரியா , க்யாதி , அருந்ததி , சாந்தி என்ற 9 பெண்கள். கபிலர் என்ற மகன்.
2. மரீசி , அத்ரி , ஆங்கிரஸ் , புலஸ்தியர் , புலாஹர் , க்ரது , பகா , வசிஷ்டர் , அதர்பர் என்ற ஒன்பது ரிஷிகளை மணந்தார்கள்.
3. பகவத் கீதை - சித்தானாம் கபிலோ முனி:
உத்தவ கீதை - சித்தேஸ்வராணாம் கபில:
4. பிந்து சரஸ் - சரஸ்வதி நதிக்கரையில், கங்கா சாகர் - கங்கை கடலுடன் கலக்கும் இடம்
5. பகவான் கிருஷ்ணர் தனது தாய்வழி பாட்டனாரான உக்ரசேனனுக்கு நாரதர் உயர்வை பற்றிக் கூறுகிறார். எல்லா ஸ்லோகங்களும் ‘தஸ்மாத் சர்வத்ர பூஜித:’ என்று முடியும். இதை பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு எடுத்துக் கூறுகிறார்.
6. மருதூர் கிராமம், சிதம்பரம் அருகில் . ராமய்யாபிள்ளை- தந்தை ; சின்னம்மாள் -தாய்
7. 1873 - இராமலிங்க அடிகளார் தனது வாழ்நாளில் இதை மூடிவிட்டார்
8. சாரதா தேவி 22.12.1853 இல் ஜயராம்பாடியில் பிறந்தார். தந்தை பெயர் ராமசந்திர முகர்ஜி
9. காமார்புகூர் என்னும் இடத்தில் உள்ள கதாதரரை மணந்தார். அவருக்கு வயது 5. கதாதரருக்கு வயது 24.
10. 21.7.1920 அன்று

# அன்பின் வழியில் நமது பயணம்

## SOUVENIR – மலர் வெளியீடு


ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடனும் வழிகாட்டுதல்படியும் இயங்கும் ஸ்தாபனங்கள் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றிய விரிவான தகவல்கள் அடங்கிய ஒரு நினைவு மலர் **(SOUVENIR)** பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீசைதன்ய மஹாபிரபுவின் ஜெயந்தியான மார்ச் 8 அன்று வெளியிடப்பட்டது.




## SOUVENIR - மலர் வெளியீடு



ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் எழுதிய மதுரபுரியின் உதயம், ஒரே ஒரு குறை, ஆலய வழிபாடு போன்ற பல அரிய கட்டுரைகள், மிக அரிதான புகைப்படங்கள், உலகெங்கும் பலப்பல இடங்களில் அன்பர்கள் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து வரும் விவரங்கள், நாம அனுபவங்கள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கிறது.








## SOUVENIR - மலர் வெளியீடு



தனி பிரதி விரும்புவோர் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டு, 10/26, ராமகிருஷ்ணாபுரம் முதல் தெரு, மாம்பலம், சென்னை - 33, தொலைபேசி - 23718351 அல்லது மாம்பலம் மதுரம் புத்தக ஸ்டாலை 044-23727400 / 09442613710 அணுகவும்.







# SOUVENIR - மலர் வெளியீடு






ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அன்பர்கள் அனைவர் இல்லத்திலும் வைத்து பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் இது. அளவான எண்ணிக்கையே பிரசுரிக்கப்படுவதால், ரூ250 மற்றும் அதற்கு மேலாக நன்கொடை அளிப்போருக்கு மட்டும் பிரதிகள் தீரும் வரையில் இது கிடைக்கும்.










Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

Our products

Globe Tipper Unit Converter Smart Alarm Pro DRACO, The Dragon










Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

## ஸ்ரீகிஷோரி சரண்பாபா - 6

ஒருமுறை ஸ்ரீகிஷோரி சரண்பாபா நாம மஹிமையை எடுத்துரைக்கும்பொழுது அவர் தன்னுடைய ஒரு ஆச்சரியமான அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

நானும் எனது இரண்டு நண்பர்களும் காபுல் நகருக்கு பயணம் மேற்கொண்டோம். ஒரு நாள் காலை நான்கு மணிக்கு நாங்கள் கீர்த்தனம் செய்து கொண்டே, அருகிலுள்ள ஒரு ஸ்தலத்திற்கு சென்று கொண்டிருந்தோம். எங்களில் ஒருவரிடம் வெள்ளி காசுகள் நிறைந்த பை ஒன்றிருந்தது. அது கிழிந்து விட்டது. காசுகள் கீழே விழுந்து சிதறின. நாங்கள் அதை வேகவேகமாக சேகரிக்க முற்பட்டோம். திடீரென்று அருகிலிருந்த காட்டிலிருந்து, நான்கு நபர்கள் துப்பாக்கிகளை ஏந்தியபடி வெளி வந்தனர். துப்பாக்கி முனையில், “உங்களிடம் இருக்கும் எல்லா பொருட்களையும் வைத்து விட்டு ஓடி விடுங்கள். இல்லாவிட்டால் உயிர் தப்பமுடியாது” என்று மிரட்டினர்.

ஆனால் எனக்கு சிறிதும் அச்சம் ஏற்படவில்லை. ஏனெனில் எனக்கு நம்பிக்கையிருந்தது. எப்பொழுதும் ஸ்ரீராதாவல்லபனின் கீர்த்தனம் பாடி வரும் எங்களுடன், பகவான் எப்பொழுதும் இருக்கிறான் என்ற திடநம்பிக்கை எனக்கு இருந்தது. அந்த பகவான் இந்த திருடர்களிடமிருந்து நிச்சயம் என்னை காப்பாற்றுவான் என்ற த்ருட விஸ்வாசத்துடன் நான் மேலும் நாமஜபம் செய்யலானேன். அப்பொழுது, ஆச்சரியமாக அங்கே ஆறு காவலாளிகள் குதிரை மேலேறி திருடர்களை தேடிக்கொண்டு வந்தார்கள். அந்த திருடர்களை கைது செய்து அழைத்து சென்று விட்டார்கள்.

பாபா, “எப்பொழுதும் ப்ரஸன்னமாக இரு. முகத்தில்

புன்னகையுடனும் மனதில் க்ருஷ்ணரின் சிந்தனையுடனும் நாம ஜபம் செய். நாம ஜபம் செய்வதால் மட்டுமே ப்ரஸன்னதை உன்னிடம் நிலையாக நிற்கும். இல்லையென்றால் அது வந்து போய் கொண்டிருக்கும்” என்று கூறுவார்.

ராதா நாமத்தில் பாபாவிற்கு அனன்ய நிஷ்டை இருந்தது. பகவான் ஸ்ரீக்ருஷ்ணரும், யமுனை கரையில் குஞ்ஜ பவனத்தில் அமர்ந்து ஒரு யோகேஷ்வரன் போல் அமர்ந்து, ஸ்ரீராதையின் சரண கமலங்களை த்யானம் செய்து கொண்டு, கண்களில் கண்ணீர் மல்க ராதா நாமத்தை ஜபிக்கிறார் என்று பாபா கூறுவார்.

பாபா, “ராதா” நாமத்தை ஜபித்தப்படியே அஷ்ட யாமங்களிலும் லீலா ஸ்மரணம் செய்வார். ராதாஷ்டமியை பாபா மிகவும் விமரிசையாக கொண்டாடுவார். அவர் அச்சமயத்தில் ப்ரம்மாண்டமான அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்வார். ஏழை எளியோர் முதல் பணக்காரர்கள் வரை, அனைத்து பக்தர்களுக்கும் வயிறார ப்ரஸாதம் அளிக்கப்படும். திடீர் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயம் எழும்பொழுது, பக்தர்கள் பாபாவை அணுகுவர். அப்பொழுது பாபா அன்னசாலையுள் நுழைந்து லட்டு, பூரி போன்றவற்றை கையில் தொட்டு, “நிறைய பண்டங்கள் இருக்கின்றனவே. நீங்கள் எல்லோரும் வீணாக கவலை கொள்கிறீர்கள். இங்கே பாருங்கள். உணவின் பொறுப்பு என்னுடையது. அதை பரிமாறுவதன் பொறுப்பு மட்டுமே உங்களுடையது. கவலைக் கொள்ளாமல் ஸங்கோசமின்றி பரிமாறுங்கள்” என்று கூறுவார். பாபா தடவி கொடுத்த பதார்த்தங்கள், பாபா கூறியது போலவே அக்ஷயமாக வந்து கொண்டேயிருக்கும். யாரும் எந்த குறையும் இல்லாமல் வயிறு மற்றும் மன நிறைவோடு திரும்புவார்கள்.

பாபா, கடைசியில் நித்ய லீலையில் ப்ரவேசிக்க முடிவு செய்தார். ஒரு நாள் தன் பக்தர்களிடம், ரக்ஷாபந்தன் அன்று, புறப்பாடு நடக்கும் என்று கூறி இதை சூசனை செய்தார். ஆனால் யாரும் இதை புரிந்து கொள்ளவில்லை. தனது ஸங்கல்பம் போல் புரட்டாசி ச்ரவணத்தன்று, அவர் நித்ய லீலையில் ப்ரவேசித்தார். (தொடரும்)

***மாலே மணிவண்ணா –106***

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

கருமைபரவித் திணிந்து நிற்கிற இருள், தன்னுள் எல்லாப் பொருளையும் மறைத்துக் கொண்டு, தானேயாய் நிற்கிறது போலவே, பகவான் எல்லாவற்றையும் தன்னுள்ளே வியாப்பியமாக மறைத்துக் கொண்டு தானே வியாபகமாக நிற்கிறான் அல்லவா. அதனால் இருள், தன் தன்மையாலும், இறைவனுக்கு ஒப்பாகிறது.

*தான் ஓர் உருவே தனிவித்தாய் தன்னில் மூவர் முதலாய*
*வானோர் பலரும் மற்றும் மற்றும் முற்றுமாய்*
*தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண் வளரும்*
*வானோர் பெருமான் மாமாயன் வைகுந்தன் எம்பெருமானே*
*(திருவாய்.1:5:4)*

*இவையும் அவையும் உவையும் இவரும் அவரும் உவரும்*
*எவையும் எவரும் தன்னுள்ளே ஆகியும் ஆக்கியும் காக்கும்*
*அவையுள் தனிமுதல் எம்மான் (திருவாய்.1:9:1)*

என்ற நம்மாழ்வாரின் கவிதைகள் இத்தத்துவ நிலையை விளக்கி நிற்கின்றன.

நீல நிறமும் ஒளியும் உடைய நீலமணி, இருள்நிறம் உடையதாய் இருந்தாலும், பிரகாசம் உடையதாய் இருக்கிறபடியால், எல்லோரையும் கவர்ந்திழுக்கும் தன்மை உடையதாய் உள்ளது போலவே, எம்பெருமான், தனது நீலநிறச் சோபையில் அனைவரையும் கவர்ந்திழுக்கிறான். அதனாலேயே பிறரை ரமிக்கச் செய்பவன் என்னும் பொருளில், இராமன் என்று அவனை அழைக்கிறோம்.

காரும், பூவை மலரும், கடலும், இருளும், மணியும் ஆகிய இவ்வைந்து பொருள்களையும், நிறத்தாலும் தன்மையாலும் ஒத்து விளங்குகிறாய் என்ற கருத்தில் உறமும் ஒத்திருக்கும் அணிகிளர் அழகு விளங்கும் மேனியை, திருமேனியை உடையாய் எனப் புகழ்ந்தார்.

*வலம்புரி ,வாய்மொழி ,அதிர்புவான் ,முழுக்குச்செல்*
*அவை நான்கும் உறழும் அருள் ,செறல் ,வயின்மொழி*

என்று பெருமானுடைய மொழிக்கு ஒப்புமை கூறிப் புகழ்கிறார்.

நின் அருள் வயின் மொழி , நின் செறல் வயின் மொழி என்று பிறித்துக் கூட்டுதல் வேண்டும். பெருமானே நீ அருளிக் கூறும் வார்த்தைகள் வலம்புரி முழக்கத்தையும் வேத முழக்கத்தையும் ஒக்கும். வலம்புரிச் சங்கின் முழக்கம் பிறந்த இடத்தின் குளிர்ச்சியைக் காட்டி நிற்கிறது. எம்பெருமானது அருளுரை தண்மை உடையதாக உள்ளது.

வேத முழக்கம் தத்துவப் பொருட் செறிவைத் தன்னுள்ளே தாங்கி வருகிறது. எம்பெருமானது அருட் சொற்கள் தத்துவ நிலையைப் பாகவதர்களுக்குத் தந்தருளும் பாங்குடையவை. பெருமானது பகைவரை அழிக்குங்கால் உண்டாகும் மொழி செறல்வயின் மொழி வான் அதிர்பையும், இடிமுழக்கத்தையும் ஒக்கும் என்கிறார். அதிர்புவான் என்பதை வான் அதிர்பு என்று மாற்றிப் பொருள் செய்க. மழை பெய்யும் முழக்கமே இங்கு குறிக்கப் பெற்றுள்ளது. மழை பெய்யும் போது அந்தப் பேரொலி நம்மை நடுங்கச் செய்யும். ஆயினும், பெய்யும் மழையால் உண்டாகிய மகிழ்ச்சி, நம்மை இன்புறுத்தும் அன்றோ. இதுவே எம்பெருமான் அழிக்கக் கூறும் சொல் என்றார். ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில், “*மாற்றாரை மாற்று அழிக்க வல்லானை*” என்று கூறியதை இங்கு ஒப்பிடுக. மாற்றாரை அழிக்காமல் அருளிவிட்டு, அவரது மாற்றை, அகங்காரத்தை, செருக்கை, மட்டும் அழிக்கின்றான் பகவான் என்கிறார் ஆண்டாள். இந்திரன் கண்ணனோடு மாறுபட்டு ‘ஆயர்களும் ஆநிரையும் அடங்க மழையால் அழிப்பேன்’ என்று புகுந்தபொழுது இந்திரனை அழிக்காமல் குன்றைக் குடையாகப் பிடித்து, ஆயரையும் ஆநிரையும் காத்து இந்திரன் செருக்கை அழித்ததை இங்கு ஒப்பிட்டுக் காண்க. இது மழை பொழியும் வான் முழக்கிற்கொப்பீடு.

(தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால்

## பசவேஸ்வரர் -2

மதலாம்பிகை கருவுற்றிருந்த காலத்தில், எப்பொழுது பசவேஸ்வர கோவிலுக்கு சென்றாலும் அவளுக்கு ஆச்சரியமான அனுபவம் ஏற்படும். சிவனாருக்கு ஆரத்தி காட்டுகையில் ஒரு சிறு குழந்தை அவரிடமிருந்து கிளம்பி, தவழ்ந்து சிரித்து கொண்டே தன்னை நோக்கி வருவது போல் அவளுக்கு தோன்றும். அதே சமயத்தில், அதை பார்த்தவுடன் நந்திகேஸ்வரரின் கொம்புகள் உயிர் பெற்று எழுந்து ஆடி, அந்த குழந்தையின் செய்கைகளை ஆமோதிப்பது போலவும் அவளுக்கு தோன்றும். ஒருநாள் நடந்தால் பிரமை என நினைக்க தோன்றும். தினமுமே இப்படி புதுப்புது விதமாக அவளுக்கு தோன்றிக்கொண்டே இருந்தது. அதே சமயத்தில் அவள் உள்ளம் ஒரு ஆனந்தத்தில் திளைக்கும்.

இது மட்டுமின்றி மதலாம்பிகைக்கு ஏனோ சேரியில் வாழ்ந்து வந்திருந்த ஜனங்களின் மேல் அலாதி பிரியம் வந்தது. தனது வீட்டிற்கு சிறு சிறு வேலைகளை செய்ய வருபவர்களிடம் சரிசமமாக நின்று பேசுவாள். இது அக்காலத்தில் வழக்கத்திலில்லை. அவர்களுடைய குறைகளை மனமாற கேட்பாள். உதவி செய்வாள். இது அவளுக்கே புதிராக இருந்தது. அதற்காக தனது இனத்தாரை அவள் வெறுக்கவில்லை. தனது குடும்ப பழக்க வழக்கங்களிலும், தெய்வ வழிபாடுகளிலும் அவளுக்கு நம்பிக்கை குறையவில்லை. அவை மேலும் அதிகமானது. அவள் இயல்பாக நடப்பதாகத்தான் அவளுக்கே தோன்றியது. ஆனால் அவள் குடும்பத்தாரோ அல்லது அயலாரோ, ஏன் அவள் யாரிடம் எல்லாம் அப்படி பழகினாளோ அவர்கள் எல்லாமும் கூட இதை வித்தியாசமாகத்தான் பார்த்தனர்.

சமயங்களில் இதை அவள் தன் கணவனான மதிராஜரிடம் சொல்வாள். அவர் ஒன்றை மட்டும்தான் நன்கு கவனித்து வந்திருந்தார். மதலாம்பிகை கோயிலுக்கு சென்று வருகையில் எல்லாம், அவளுக்கு ஏதோ ஒரு பூரிப்பு இருந்து வந்ததை கண்டார். அது சாதாரண விஷயம்தான் என்று இருந்து விட்டார். இரண்டு மூன்று முறை மதலாம்பிகை தனது அனுபவங்களை சொன்னபொழுது, அவர்

இது ஏதோ தெய்வீகமான விஷயம் என்று உணர்ந்தார். மேலும் இதை நுண்ணியமாக கவனிப்பதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வாய்க்கவில்லை. மதலாம்பிகை இங்கலேஸ்வருக்கு பிரசவத்திற்காக தனது அன்னையின் இல்லத்திற்கு சென்றபொழுதுதான், அவளுக்கு இந்த அனுபவங்களின் பரிமாணம் கொஞ்சம் புரிந்தது.

அதை புரிய வைத்தவர் ஈசான்ய குரு என்ற மஹாத்மா. அவர் பகேவாடியில் இருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவில் இருந்த கூடலசங்கமா என்ற நகரத்தில் இருந்து வந்தார். இங்கு கிருஷ்ணா நதிக்கரையில் சங்கமேஸ்வரர் சிவன் கோவில் இருக்கிறது. ஈசான்யகுரு, சைவ சித்தாந்தங்களை நன்கு அறிந்த, ஒரு மடத்தலைவர். மிக அரிதான பாரம்பரிய பல்கலைக்கழகம் ஒன்று அவர் கீழ் அங்கு செயல்பட்டு வந்தது. இந்த ஈசான்ய குருவிற்கு ஜாதவேத முனிவர் என்றும் பெயருண்டு. சாத்வீகமான சைவ சமயத்தை போதித்து வந்தவர். அவர் காலத்தில் அங்கு காபாலிக மதம் பரவி இருந்தது. அதை பின்பற்றியோரை எல்லாம் கூட எல்லாம் இவர் தனது போதனையினாலும், அன்பினாலும் மாற்றி வந்தார். இதைப்பற்றி பின்னர் பார்க்கலாம். வேதங்களில் ஆழ்ந்த புலமை கொண்ட இவர் சிறந்த பக்தராகவும் இருந்தார். இந்த ஞானியை பார்ப்பதற்கு பலரும் அருகிலிருந்த கிராமங்களிலிருந்து வருவர். இவரின் அனுக்ரஹத்தினால் பலருக்கும் பலவிதமான நன்மைகள் கிடைத்து வந்தன. இவர் பரமேஸ்வரனிடம் "அன்பான வழிபாட்டின் மூலமாகத்தான் இறைவனை அடையமுடியும் என்பதையும், வெற்று சடங்குகள் இறைவனை அடைய உதவாது என்பதையும், அன்பால் ஒரே இறைவனை வழிபடுவதன் மூலமே சமூகத்தில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை தகர்க்க முடியும் என்றும் உலகிற்கு போதிக்க பாண்டித்யமும், காம்பீர்யமும், கருணையும், சக்தியும் மிகுந்த ஒருவர் தனக்கு, தன் மடத்திற்கு வேண்டும்" என்று ஒரு பிரார்த்தனை செய்து வந்தார். சுயநலமற்ற பிரார்த்தனையான இதற்கு கைலாயபதி எப்படி செவி சாய்க்காமல் இருக்க முடியும்? பரமேஸ்வரன் கண்டிப்பாக அருளுவான் என்று அந்த முனிவர் அறிந்திருந்தாலும், அது எப்படி நிகழப்போகிறது என்று ஆவலுடன் இருந்தார். (தொடரும்)

"மதுரமுரளி" மாத இதழுக்கு சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு : +91-44-24895875

➢ Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83

➢ Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.

➢ Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.

➢ Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| ஏகாதசி | -- | ஏப்ரல் 3, 17 மே 2 |
| ஏப்ரல் 3,4,5 | -- | நங்கநல்லூர் குருவாயூரப்பன் கோவிலில் உபன்யாசம் |
| ஏப்ரல் 6 | -- | தஞ்சாவூர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| ஏப்ரல் 8 | -- | தூத்துக்குடி மஹாருத்ரம் பூர்த்தி |
| ஏப்ரல் 10 | -- | பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் பிரதிஷ்டா தினம் |
| ஏப்ரல் 12 | -- | திருநாங்கூர் திருஅரிமேய விண்ணகரம் கோவில் சம்ப்ரோக்ஷணம் |
| ஏப்ரல் 15 | -- | காலை மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - ராணிப்பேட்டை; மாலை - அப்பர் ஜெயந்தி விழா குடியாத்தம் |
| ஏப்ரல் 20-26 | -- | திருவனந்தபுரம் உபன்யாசம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.